சொல்ல வரவில்லை. எந்த எந்தப் பகுதியில் ஆய்வு நடத்தினார்கள்? எந்த எந்தப் பகுதியில் ஆய்வு நடத்துகிறார்கள்? அதிகாரிகள் போகாத ஊர்கள் பல இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இந்த நோய் பாதிக்கப்பட்ட பகுதி முழுவதற்கும் மருத்துவ உதவி வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம். அது அல்லாமல் எல்லோருக்கும் மருத்துவ உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்கமாட்டேன். ஆகவே, அதிகாரிகள் போகாத இடங்களுக்கும போய் தடுப்புப் பணிகளை மேற்கொள்ள தேவையான செண்டர்களை, நிறைய செண்டர்களைத் திறந்து, யானைக்கால் நோயைத் தடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவரவர்களே, தேவைப்பட்டால் மேற்கொண்டு அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கலாம்.

(உ) முதுமலை சரணாலயம் மூடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உச்சி அவர்களுக்குப் பதிலாக திரு. கே. கல்லன் அவர்கள் மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு. கே. கல்லன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "முதுமலை வனவிலங்கு சரணாலயம் 45 நாட்கள் வரை மூடப்பட்டுள்ளதால், பார்வையாளர்கள் அனுமதிக்கப் படாமை குறித்தும், கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டால் வன விலங்குகள் குடிநீர் தேடி அலையும் பரிதாப நிலைமை குறித்தும்" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

1987 ஏப்ரல் 7] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

அறிக்கை.

1986 ஆம் ஆண்டில் இரு பருவ மழைகளும் பொய்த்துவிட்டதால், முதுமலை வனவிலங்குச் சரணாலயத்தில் போதிய மழையில்லாமல் போய்விட்டது. இதனால், முதுமலை கிழக்குப் பகுதிகளிலும், சீகூர் வனச் சரகம் முழுவதிலும், வறட்சியான நிலைமை ஏற்பட்டதினாலும், மோயாறு ஆற்றில் நீர் வற்றிக்கொண்டு வந்ததாலும் வறட்சியின் காரணமாக, புல் தரைகள் காய்ந்து காட்டுத் தீ பரவும் அபாயம் ஏற்பட்டதாலும், சரணாலயத்தை 1—3—1987 முதல் 14—4—1987 வரை 45 நாட்களுக்குப் பொதுமக்களுக்கு மூடிவிடும்படி 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம் பிரிவு 33-ன்கீழ் தலைமை வனவிலங்குக் காப்பாளர் அறிவித்துள்ளார். இவ்வாறு சரணாலயம் கோடை மாதங்களில் மூடப்படுவது வழக்கத்தில் உள்ளது. கடந்த ஆண்டும் இவ்வாறு மூடப்பட்டிருந்தது.

2. வறட்சிக் காலங்களில் சரணாலயத்திலுள்ள புற்பூண்டுகள் காய்ந்து போய்விடும். இதனால் தானாகவே தீ விபத்து ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. தவிர, பார்வையாளர்கள், புகை பிடிப்பதனாலும் தீ விபத்து ஏற்படக்கூடுமாதலால் சரணாலயம் மூடப்பட்டுள்ளது. 14—4—1987-க்குப் பின் அப்போதுள்ள நிலைமையை ஆராய்ந்து சரணாலயத்தை மீண்டும் பார்வையாளர்களுக்குத் திறந்துவிடுவது குறித்து தலைமை வனவிலங்குக் காப்பாளர் முடிவு எடுப்பார்.

3. முதுமலை வனவிலங்குச் சரணாலயத்தில் தற்போது ஏற்பட்டுள்ள தண்ணீர் பற்றாக்குறையினைப் போக்குவதற்காக போர்க்கால அடிப்படையில் விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மலைப்பகுதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் (Hill area Development Programme.) ரூ. 7.5 இலட்சம் செலவில், 4 தண்ணீர் குட்டைகள் மற்றும் 6 ஆழ்துளைக் கிணறுகள் தோண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவற்றில் 4 தண்ணீர் குட்டைகளும், 3 ஆழ்துளைக் கிணறுகளும் தோண்டப்பட்டுள்ளன. ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து மணிக்கு சுமார் 10,000 லிட்டர் தண்ணீர் வீதம் எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்

டத்தின்கீழ், மேலும் 4 டாங்கர்கள் மூலம் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு, தேவையான இடங்களில் வனவிலங்குகளின் வசதிக்காக ஊற்றி வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தற்போது, வனவிலங்குகளுக்குத் தேவையான அளவு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

4. அறிக்கைகள் அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு.

THIRU T. VENKATA REDDI: Mr. Deputy Speaker, Sir, On behalf of the Chairman of the Public Accounts Committee. I present the following Reports of the Committee:

"Fifty eighth report of the Committee on Public Accounts on certain paragraphs in the Accounts of the Government in Tamil Nadu and the Report (Civil) of the Comptroller and Auditor-General of India for the year 1981-82 pertaining to Social Welfare Department;

Fifty ninth Report of the Committee on Public Accounts of action taken by the Government on the recommendations contained in the Six Report (Seventh Assembly) of the Committee on Public Accounts (1980-81) on the paragraph pertaining to certain Departments on the Accounts of the Government of Tamil Nadu for the years 1974-75 and 1975-76 and the Reports of the Comptroller and Auditor General of India (Civil) for the years 1974-75 and 1975-76.

Sixtieth Report on the action taken by the Government on the recommendations contained in the Twenty second Report of the Committee on Public Accounts (1982-83) on the Reports of the Comptroller and Auditor General of India for the years 1977-78 and 1978-79 (Revenue Receipts).